பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல்
சிறப்பு விழிப்புணர்வு நிகழ்வு - 10.12.2019



மேலாண்மையர் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்வு - 10.03.2020




**வெளியிடுபவர்:**

முனைவர் **து. பாண்டியராஜா,** முதல்வர்

**பொறுப்பாசிரியர்:**

முனைவர் **சு. உமா மகேஸ்வரி,** உதவிப்பேராசிரியர்

**மாணவச் சார்பாளர்கள்:**

**ஜெ. ஜெ. சூரிய பிரபா** - முனைவர்ப் பட்ட ஆய்வாளர் (தமிழ்)
**க. முத்துக்காளை** - இளநிலை ஆய்வாளர் (தமிழ்)
**த.வெள்ளைச்சாமி** - முதுகலை இரண்டாமாண்டு (தமிழ்)
**க.அன்பரசன்** - முதுகலை முதலாமாண்டு (தமிழ்)
**கொ.ஹ.வாணி** - இளங்கலை மூன்றாமாண்டு (தமிழ்)
**சௌ. அஸ்வின்** - இளங்கலை இரண்டாமாண்டு (தமிழ்)
**ரா. வீரவள்ளி** - இளங்கலை முதலாமாண்டு (தமிழ்)

அச்சிட்டோர்: சாரோன் பிரிண்டர்ஸ், மதுரை-2, செல்: 99439 33377


# தியாகரராசர்

## செய்தி மடல்



## கலையன்னையார் நினைவு விழா
## 10.03.2020


2019 - 2020 பிற்பருவம்

மலர் - 39 மடல் - 2




தமிழ்த்துறை - முத்தமிழ் விழா / இயற்றமிழ் விழா - 29.01.2020



இசைத்தமிழ் விழா - 30.01.2020



நாடகத்தமிழ் விழா - 30.01.2020




71 - ஆம் ஆண்டுப் புலவர் விழா - 22.02.2020




ஆங்கிலத்துறை சார்பில் அரங்கேற்றப்பட்ட நாடகம்
(Arms and the Man by George Bernard Shaw)
09.12.2019 - 13.12.2019





# கல்லூரி மகளிர் தினவிழா!
## கலையன்னையின்
## நினைவு போற்றும் திருநாள்!

அன்னையின் அன்புமுகம் என்று காண்போம்?!

ஆன்மீகத் தேடல்களின் தூண்டுகோள் வீழ்ந்து போனதே!

இவ்வுலகில் இனிமேல் பாசமிகு சொல் கேட்பது எப்போது?

ஈக அருளென யாரிடம் இறைஞ்சி நிற்பது?

உன்னதத் தாயை உலகம் காண்பது எந்த நூற்றாண்டில்?

ஊக்கமதனை உரைநிகழ்வில் யார் சொல்லிக் கேட்கப்போகிறோம்

"எல்லாம் கனியாகும்" என்றே கனிதனைக்

கையில் தந்து தேற்றுவார் யாருளர்?

ஏங்கியழும் எமது விழிநீரை எந்தக்கரங்கள் துடைக்கப்போகின்றன?

ஐயையவர் அடிச்சுவட்டில் சிலாகித்துத் தொடர்வோம்!

ஒருநாளும் மறவாது ஒளிதீபம் ஏற்றுவோம்!

ஓங்கி உயர்ந்த உத்தமி ராதாம்மா தம் புகழ்பாடுவோம்

ஔடதமான அருள் வடிவில் ஆத்மசக்தி பெற

ஆராதிப்போம்! ஆராதிப்போம் ! ஆராதிப்போம்!

- அன்னையின் அடிப்பொடி
இராம. மலர்விழிமங்கையர்க்கரசி
தமிழ்த்துறைத்தலைவர்





# பெண்ணே நீ...

*சலங்கை கட்டிய பெண்ணே பிடிப்பு*
*சட்ட புத்தகங்கள் புரட்டிப் படிப்புத் துடிப்பு*
*கண்ணுக்கு மை போட்ட பெண்ணே நீ தானே*
*கல்வி மருத்துவம் மாவட்ட ஆட்சியாளர் தானே!*

*சரித்திரம் பேசும் பாரு பெண்ணே நீ*
*வீர நாச்சியின் வீரம் கொண்ட பேத்தி நீ*
*பருத்தி எடுக்கும் பெண்ணென நினைத்தாயோ நீ*
*பாரதம் ஆண்ட அன்னை இந்திராகாந்தி!*

*ஊதாரியாகத் திரிந்தாலும் பெற்றபிள்ளை ராசா*
*உள்ளபடி சொன்னாலே அன்னை தெரசா*
*பிடாரி என உன்னை புறந்தள்ளி அவர் முன்னே*
*சீறிப்பாய்ந்து சிலந்தி வலையை உடைத்து வா பெண்ணே!*

*ஓடுகின்ற நதியெல்லாம் உன் பெயர் தானே*
*முடங்கிக் கிடந்தால் கிணற்றுத் தவளை தானே*
*சாடுகின்ற முன்னாள் சறுக்கிப் போகலாமா*
*பாடுகின்ற குயில் போல பரந்து நீ வாம்மா!*
*மூடர்கள் பேச்சு முகம் சுளிக்கலாமா*
*முந்தி வரும் திறமைக்கு நீ வேலி போடலாமா*

*கீழ்த்தனம் பேசுபவர்கள் முன்னை மெடிக்கா வா மா*
*கிரிவலம் உன் சாதனை தொகுத்துத் தாமா*
*கலங்கிக் கிடந்தாள் திசை கிடைக்குமா*
*கண்ணீரும் கவலையும் கரை ஏறுமா*

*மயங்கிக் கிடந்தாள் வாழ்க்கை தேய்பிறை தானமா*
*கலங்கரை விளக்காகத் திசை காட்டமா!*
*நாய்க்கும் நரிக்கும் அஞ்சாமல் நிமிர்ந்து நில்*
*நான் பாரதியின் நெருப்பு என்று சொல்*
*உன்னால் முடியும் பெண்ணே நீ*
*யார் என்று காட்டு கண் முன்னே!*

- பா. பொன்பாண்டி
COE, Office Assistant









# மண்ணும் மானிடமும்

வெண்மழைகள் என்னுள் வீழ்ந்தால் – பொன்னொத்த
நெல்மணிகள் உனக்குண்டு
கண்மணி என்னைப் பிளந்தால் – முக்கனிச்
சுவைகொண்ட நீருண்டு
முத்தான வித்துக்களைத் தெளித்தால் – சத்தான
கறிகளெல்லாம் உனக்குண்டு
இவற்றால் பயன்கொண்ட என்னிடத்திலே – நீ
வஞ்சம் செய்வதேனோ மானிடனே!

**– கு. பார்த்தீபன்,**
*இளமறிவியல் இரண்டாமாண்டு*
*வேதியியல்*



# மானமில்லா மனது

மனமே!!

இல்லை என்ற போதும்
எதைத் தேடிப் பிதற்றுகிறோம்

வலிகள் ஆயிரம் பகிர
தோழமை ஒன்றைத் தேடினாயோ!
தோழமை இன்று தோற்ற
கதை கேளாயோ!

வானவில் என எண்ணினாய்
வறண்ட நிலம் ஆனதேன்;

வலிகள் ஒன்றும் புதிதல்ல
வழிகள் மாற்றும் தருணமிது;

நீதியோடு கீதை என
எதை நீ கொண்டு வந்தாயோ
அதையே எடுத்துச் செல்

தோழமை அற்ற தோள்களும்
துவண்டு விடுமா என்ன?

இருந்தில்லா பிணியான
எதிர்பார்ப்புகளற்ற
வாழ்க்கையை வாழக்
கற்றுக்கொள்!

தேடாதே தேடலை!!

– வெ. அஜித்குமார்,
இளமறிவியல் இரண்டாமாண்டு, கணிதம்







# அடிமையின் தலைவன்

*அன்று இந்தியா விடுதலை அடைய*
*வெள்ளைக்காரர்களிடம் இருந்து காந்தி,*
*நேரு போரிட்டனர்*
*அழகிய இந்தியாவை நம்மிடம்*
*ஒப்படைத்துச் சென்றனர்*
*ஆனால் அவர்கள் இன்னும் நம்மை*
*அடிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்*
*எவ்வாறு?*
*கையிலும், சட்டைப் பையிலும்*
*படுக்கும் அறையிலும் கூட*
*தூக்கத்தை இழந்து, மதியை இழந்து*
*சோம்பேறியாக மாறிவிட்டோம்*
*கைப்பேசி ஒன்று*
*கைகள் இரண்டு விளையாடுது நின்று*
*அன்று நாட்டை அவர்கள் மீட்டார்கள்*
*இன்று நம்மை யார் மீட்பார்?*
*ஒரு துளி நினைத்துப் பார்*

– A. அசோக்,
இளங்கலைத் தமிழ்,
இரண்டாமாண்டு

# தாய்ப்பாசம்

ஏன் தாயே நான் அழுத போது நீ
அழுதாயா என்று தெரியவில்லை, ஆனால்
நீ அழும் ஒவ்வொரு நொடியும்
என் கண்கள் வியர்க்குதே!
இது தான் தாய்ப்பாசமா???

- C. மகா பாபு
இளங்கலைப் பொருளாதாரம்
முதலாமாண்டு

# போட்டி

ஓட்டப்பந்தயம் இது வெறும்
விளையாட்டு அல்ல்
ஒரு வீரனின் குறிக்கோள்
தலைவணங்கித் தயாராகும் மந்திரம் கூறி
விசில் ஊதும் சத்தம் கேட்டு
உயிரை வெறுத்து ஓடுவர்
தனது வலிகளுக்கு விருந்தாக
வெற்றி மருந்தை ஈட்டுவர்

– A. அசோக்,
இளங்கலைத் தமிழ்,
இரண்டாமாண்டு

# பிரிவின் சுகம்

உன் பிரிவில் வாழும் என் இதயம்
ஏனோ
உன்னை நேரில் காண மறுக்கிறது
உன் நினைவே போதுமென
சிரித்துக் கொண்டு வாழ்கிறது
நினைவில் யாரும் நம்மை
பிரிக்க முடியாதென்று...
என்றும்
உன் நினைவில் நான்.

– சே. சிவகாமி
முதுகலைத் தமிழ்,
முதலாமாண்டு







– S. Subiksha
II B.A English.

# தொடர்கள்

பிறந்தவுடன் குழந்தை சிரிப்பதில்லை
விழாமல் யாரும் நடப்பதில்லை
சிரித்தால் கவலை விடுவதில்லை
தோல்வி கிடைக்காமல் வெற்றி இல்லை
வெற்றி என்பது நிரந்தரமில்லை
துன்பம் என்னை விடவில்லை
உண்மைகள் என்றும் தோற்பதில்லை
பொய்கள் எங்கும் நிலைப்பதில்லை
பெண்கள் இல்லாமல் ஆண்கள் இல்லை
வாழ்க்கை என்பது ஒருமுறை தான்
இவையெல்லாம் இல்லாவிட்டால்
அது வாழ்க்கையே இல்லை

– A. அசோக்,
இளங்கலைத் தமிழ்,
இரண்டாமாண்டு

# தூய்மை...

ஆரோக்கியத்தின் வசிப்பிடம் தூய்மை.
நேர்மறை நினைவை எழுப்பிடும் தூய்மை.
நிலம் நீர் காற்றைக் காத்திடும் தூய்மை.
நிம்மதியான மூச்சைக் கொடுத்திடும் தூய்மை.

தலைமுறை வாழ தேவைப்படும் தூய்மை.
தனிமனிதன் கையில் ஒளிந்திருக்கும் தூய்மை.
உள்ளத்தூய்மை உண்மையின் கையில்.
பொதுவிட தூய்மை பொதுமக்கள் கையில்.

கல்லூரித் தூய்மை மாணவர் கையில்
நாட்டின் தூய்மை நமது கையில்.

- C. மகா பாபு
இளங்கலைப் பொருளாதாரம்
முதலாமாண்டு







# "மனித நேயம்"

ஒரு மெலிந்த புழுபோல
தூரத்து வானத்தில் வளர்ந்து
போகும்
அந்த கருப்புப் பறவைகள்
வாழ்க்கை
ஏதுமற்றது என்றே கத்துகின்றன.
தரிசு நிலத்தில் விழுந்த
விதைபோல மனிதம்
நம்பிக்கையற்று மண்ணில்
புழுதி சூழ கிடக்கிறது
மண்ணின் பிரிவினையையும்
வானத்தின் ஏதுமற்ற
பார்வையையும்
கழற்றி எறிய - நேசமே
கருணை புரிகிறது
நானறிந்த கிழவனொருவன்
நேசிக்காமல் இருப்பது ஒரு
துரதிஷ்டம் என்றானே!
சொற்கள் எவ்வளவு மேன்மையாக
இருக்கின்றன அவை நேசத்தை
போதிக்கும் போது!
பற்றற்றவனாகவும் பரதேசியாகவும்
திரியும் மனதிற்கும் ஏதுமற்றதாய்
சுழலும் இந்த உருண்டைக்கும்
நேசமே ஆதாரமும் அர்த்தமுமாக
இருக்கிறது - மனிதத்தின்
ஆதி சொல் நேசமாகக்கூட
இருந்திருக்குமோ?

- G. *சிவா,*
*இளங்கலை ஆங்கிலம், இரண்டாமாண்டு.*

---

## காதல் மொழி

**வண்டுக்குப் பூவின் மீது காதல்**
**சத்தமில்லா முத்த மொழிகளோடு....**

**காற்றுக்குத் தண்ணீர் மீது காதல்**
**சத்தமில்லா மௌன மொழிகளோடு....**

**பேனாவிற்குத் தாளின் மீது காதல்**
**சத்தமில்லா கிறுக்கல் மொழிகளோடு....**

**எனக்கு உன் மீது காதல்**
**சத்தமில்லாமல் நீ என்னுள்ளே வந்துவிட்டாய் என்ற**
**நாணத்தோடு.....**

- *ப. அரியநாச்சி*
*முதுகலைத் தமிழ்*
*முதலாமாண்டு*





## ஆசை! ஆசை! ஆசை! நன்றி சொல்ல ஆசை

என்னைப் பெற்ற என் தாயிக்கு
என்னை வளர்க்கும் என் தகப்பனுக்கு
என் வாழ்வில் ஒவ்வொரு படியிலும்
உடன் நின்று விழும் போதெல்லாம்
தூக்கும் என் அண்ணனுக்கு
என் கூடவே இருக்கும் குலதெய்வத்துக்கு
என் பெயரை எழுதச் சொல்லித்தந்த என்
முதல் டீச்சருக்கு
எனக்குத் தலைமைப் பண்பைச் சொல்லித்
தந்த *"LASAC"* இயக்கத்திற்கு
சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து நான் கல்லூரி
சென்று வர உதவும் அதிகாரிகளுக்கு
நான் மென்மேலும் உயர உண்மையாக
உழைக்கும் உணர்வுள்ள மனிதர்களுக்கு
நன்றி! நன்றி! நன்றி!
நான் இன்று நிற்கிறேன் அது என் கால்களினால் அல்ல
பல ஆயிரம் கரங்களால்!

C. *மகா பாபு*
இளங்கலைப் பொருளாதாரம்
முதலாமாண்டு

---

## உனது நினைவு

அமைதியாக உறங்கிக் கொண்டு இருக்கும்
என் மனதினை உன் குழலின் ஓசை
எழுப்பி உனது நினைவு அலைகளுடன்
பேச வைத்தது அடிப்பெண்ணே
இது நியாயம் ஆகுமா?

- A. அசோக்,
*இளங்கலைத் தமிழ்,*
*இரண்டாமாண்டு.*

# "சுகமான சுமை"

மண்ணுக்குப் பேசத் தெரியாது
சிரிக்கத் தெரியாது
அழுகத் தெரியாது
தமிழர்களையும், வரலாறுகளையும் சுமக்கத் தெரியும்
தாயாகிய பெண்ணும்
வாசனை மாறாத மண்ணும்
மனிதர்களை என்றுமே நிலைத்து நிற்கச்செய்யும்
தாகத்திற்காக காத்திருக்கும் மண்
தண்ணீரை அதிகளவு பருகிவிடும்
தன் செல்லப்பிள்ளைகளை வளர விடும்
உழவன் உழவு செய்ய
தாய் மண் புழுதி கிளம்ப
தரை இறங்கும் நீர்
தாய் மண் ஏற்காது
தாயைப்போன்று தன்னலம் கருதாது
பயிர்களுக்குப் பசி தீர்க்கும்
உழவனின் வயிற்றில் பால்வார்க்கும்
மண்ணிற்காகச் சண்டை போடும் மனிதா!
நிலத்தில் உள்ள வளத்தை நீ சுரண்டினாய்
மண்ணை விற்க திருடினாய்
தாய் அவள் தாங்குவாளா?
சுற்றி இருக்கும் வளங்களைப் பார்
மழை பொழியும் மண்வாசனை
முட்டாள் மனிதா நீ செய்யடா யோசனை





இருப்பதை சுரண்டி விட்டால்
நிலத்தில் ஏதுடா நீர்?
கண்ணீர் கண்ணீர் கண்ணீர்
தண்ணீர் பிறப்பதும் மண்தான்
குழந்தையின் தாகத்தைத் தீர்ப்பதும் மண்தான்
விவசாயம் செழிப்பதும் மண்ணால் தான்
மண் வளம் காணாமல் போவதும் உன்னால் தான்
ஓடினால் தாங்குவதும் மண் தான்
விழுந்தால் தாங்குவதும் மண் தான்
விவசாயியை ஏர் பிடிக்கச் செய்வதும் மண் தான்
ஒன்றை மனதில் வைத்துக் கொள்
தோண்டுபவரும், திருடுபவரும் நாம்
வீண் பழி அவள் மேல்
நாம் நிற்பதே அவளது மேல்
மண்ணைத் திருடியவன் சிறைச்சாலை
தப்பிப்பவன் தார்ச்சாலை
வழி இல்லாதவனுக்கு மண்சாலை
ஆடும் ஆட்டமும்
போடும் கூத்தும்
கொஞ்சம்
நிரந்தரம் இந்த மண் தான்
அதிகம் ஆசை கொள்ளாதே
உன்னை ஆறடி அளவெடுத்து
உன்னைப் பத்திரமாகக் காப்பாள்
நிம்மதியாக உறங்கு

– **A. அசோக்,**
*இளங்கலைத் தமிழ்,*
*இரண்டாமாண்டு.*

# "அன்றும் - இன்றும்"

எத்தனை எத்தனை குழிகள்
எட்டிப் பார்த்தால் எத்தனை ஆயிரம் வாழ்க்கை
அரிசி கிண்ணமாய் ஊரு
அதை கவனிக்க இங்கு யாரு
விளைந்ததை எண்ணிப் பார்க்கவில்லை
விதைத்தவனையும் கருத்தில் கொள்ளவில்லை
எண்ணம் எல்லாம் என்ன? இலவச
கறிவேப்பிலை கொத்தமல்லி
ஒட்டிப் பிறந்ததோ மண் என்றால்
கட்டிப் பிறந்தோம் என கூறுபவரும் உள்ளீர்
மண் வாசனை வீசும், மறைந்த
ஊரின் எண்ணம் மனக் காட்சியிடும்
வயலெல்லாம் பச்சை மடையெல்லாம் செழுமை
கரையெல்லாம் வளமை கனியெல்லாம் இனிமை
இவையெல்லாம் நீர்மையால் இவற்றையெல்லாம்
தருவது காவிரி என்னும் பதுமையால்
ஆண்டுக்கொரு திருவிழா ஆளுக்கொரு ஊருக்கொரு
பெருவிழா இவையெல்லாம் இருக்காது
ஐ வகை நிலமாம் ஐ வகை
மக்களாம் இவ்வருமை எங்குள்ளது?
எங்கோ உள்ள மொழிக்கெல்லாம் உள்ள தாய்மொழியிடம் உள்ளது
அவளின் பெருமை உணரார் மண்ணின்
பெருமை உணராதவர் ஆவார்
தாய் மடியும் மண் மடியும் ஒன்றா
இல்லை யென்றால் மாறுபட்டதா
தாய் எந்த பயனின்றி உனக்குப் பணி செய்வாள்
மண்ணும் எந்த பலனின்றி உனக்கு உணவிடும்
மடை திறந்ததோ கையில் கலப்பை எடுப்பதோ





புதிதில்லை புதிதாகும் வறுமையின் போது
அறுக்க அறுக்க வரும் நெல்மணிகள்
போதும் எனக்கூறும் கைகளிலுள்ள கதிர் அறுவாள்
இவை அடையாளமாம் மண்ணின் பெருமை
சென்ற இடமெல்லாம் சோறு, குடிப்பதற்கோ
காவிரி ஆறு, நடப்பதற்கோ பச்சை
வயல்களின் கரைகள், மணம் மணப்பதற்கோ,
பூக்கள், கண்ணுக்கோ குளிர்ச்சியான
பச்சை நிறம் இவையெல்லாம் அன்று
இன்று பார்ப்பதற்கோ வாட்ஸ் அப், கேட்பதற்கோ
யூடுப், யோசிப்பதற்கோ கூகுள்,
நடப்பதற்கோ சிமெண்ட் பாதை, சென்ற
இடமெல்லாம் பானிப்பூரி, விரைவு உணவு
எங்கு செல்கிறோம் மண்ணைத் தேடியா?
மண்ணிற்கு உள்ளேயா?
பார்ப்பதற்குப் பலபல நடப்பதோ கலகல
வாழ்க்கையோ சில சில மாற்றம் புதுமையை நோக்க
இறுதியில் அய்யோ அய்யோ என்ற சத்தம்

*- ம. செல்வகணபதி,*
*இளங்கலைத் தமிழ்,*
*முதலாமாண்டு*

# வினைகள்

தவறுகள் நீ செய்தாலும்
உண்மையை ஒத்துக் கொள்
தவறில்லை
கீழே நீ விழுந்தாலும் தூக்கி விட
யாரும் இல்லை
விழு நன்றாக அழு
இன்றைய விதை நாளைய மரம்
உன்னைக் கேலி செய்தவர்களுக்கு
நீ கூறும் முதல் இல்லை, இல்லை
இறுதி பதில்
இன்று எனக்கு
நாளை உனக்கு...

- A. அசோக்,
இளங்கலைத் தமிழ்,
இரண்டாமாண்டு

# தூய்மையான பாரதம்!

வாருங்கள்! வாருங்கள்!
நண்பர்களே!
வளமான பாரதத்தை
வலுப்படுத்துவோம் நண்பர்களே!
(வாருங்கள்)
குப்பைகளை அகற்றிடுவோம்!
குட்பை அதற்குச் சொல்லிடுவோம்!
(வாருங்கள்)
தனி மனித முழக்கத்தினை...
தவறாமல் கடைப்பிடிப்போம்!
(வாருங்கள்)

ஏழையாக நீ இருந்தும்
ஏற்றம் பெறலாம் வாழ்விலே!
சுத்தம் அதனை அனுதினமும்
நித்தம் பேணி காத்திட்டால்!
(வாருங்கள்)
இந்தியாவின் வளர்ச்சிக்கும்!
ஈன்றோர் மன குளிர்ச்சிக்கும்!
சுத்த சுகாதார பாதையையே...
சுகமாய் வாழ்வோம் தரணியிலே!
(வாருங்கள்... வாருங்கள்!)

– S. *பெருமாள்*
*முதுகலைப் பொருளாதாரம்,*
*முதலாமாண்டு*

# தீமை வெற்றிக்கு வழி

**இந்த உலகம் உன்னைக் கேலி செய்யும்**
**திட்டும், அவமானப்படுத்தும்**
**பல்லுடைய கேலிக்கு ஆளாவாய்**
**அங்கு உன்னுடைய நன்மை தெரியாது**
**வெற்றி தான் தெரியும்**
**நன்மை நினைப்பதால் நீ உயரமாட்டாய்**
**தீமையை நினைப்பாய்**
**அது உனது வெற்றிக்கு வித்திடும்.**

– A. அசோக்,
இளங்கலைத் தமிழ்,
இரண்டாமாண்டு





# இப்படிக்கு...

கருப்பாய்த் தான் இருப்பேன்
அப்படி ஒன்றும் அழகில்லை
ஆனால் பலரை வசீகரிப்பேன்
மயக்கும் சக்தி என்னுள் அதிகம்
அரசர்களும் என்மடியில் இடம்கொள்ள
உயிரையே கொடுத்தனர், என்னிடத்திலேயே!
என்ன ஆனாலும் என்னிடம்
அனைவரும் ஒருநாள் வரத்தான் வேண்டும்
என் அழகில் புதையத்தான் வேண்டும்
தங்கம் கொடுப்பேன், தண்ணீர் கொடுப்பேன்
விதையை துப்பினாலும் விருட்சம் தருவேன்
வசிப்பிடம் தருவேன், அடைக்கலம் தருவேன்
வசியம் செய்தே மயக்கம் கொடுப்பேன்
ரத்தம் குடிப்பேன், தசைகள் திண்பேன்
எலும்புகளும் நெகிழியும் மட்டும் விதிவிலக்கு
வரலாறு காண என்னைத் தோண்டுவார்கள் புதைப்பார்கள்
மண்ணாசை மன்னர்களைத் தேடித் தேடி
நான் விற்கப்படுகிறேன் விலைமகளாக
கடத்தப்படுகிறேன் கணிகையராக
ஆதரவு இன்றிப் பணம் என்னும் பகலுக்கு

இப்படிக்கு,
மண்

– *சௌ. அஸ்வின்*
*இளங்கலைத் தமிழ்,*
*இரண்டாமாண்டு.*

# மண்ணும் மானிடமும்

(அ முதல் ஔ வரை)

அகிலமெல்லாம் எனதென்று

ஆசை கொண்ட மானிடனே

இனிமேலும் உன்னை விட்டால்

ஈசலும் மிஞ்சாதே என்னிடத்தில்

உலகெல்லாம் உனதென்று

ஊர் கூட்டி நீ சொன்னாலும்

எல்லையில்லா எந்நிலத்தில்

ஏழடிதானே உனக்கு உண்டு

ஐயமின்றி நான் உரைப்பேன் - இனி

ஒருபொழுது உன்னைவிட்டால்

ஓராயிரம் வலிகள் என்னுள்தானே - பெரும்புலமை

ஔவையும் எந்தன் மண்ணுள்தானே

- கு. பார்த்தீபன்,
*இளமறிவியல் இரண்டாமாண்டு,*
*வேதியியல்*

# மரணம்

ஆறு செமஸ்டரில் அரியர் வைத்து விட்டு
கிளியர் செய்யாமல் ஓடுவது மரணம்

எட்டு ரூபா டிக்கெட்டுக்கு ஏழு ரூபா வைத்துக்
கொண்டுப் பேருந்தில் ஏறுவது மரணம்.

பெற்ற தாய் தன் பிள்ளைகளிடம்
பேசாமல் இருப்பது மரணம்

பெற்ற தகப்பன் தன் பிள்ளைக்கு வேண்டியதைச்
செய்ய பணம் இல்லாமல் மறுப்பது மரணம்

C. *மகா பாபு*
இளங்கலைப் பொருளாதாரம்
முதலாமாண்டு








- ர. பவித்ராதேவி
II BA English

# சுதந்திரம் எது?

அதிக வாய்ப் பேச்சினையும்

அதிக பாதுகாப்பையும்

தவிப்பவர்க்குத் தான்

சுதந்திரம் அதிகம் இருக்கும்

- A. அசோக்,
இளங்கலைத் தமிழ்,
இரண்டாமாண்டு

(சிறுகதை)

# உறவுகள்

"சபரி, இங்கே வா! ஏன் இன்னும் தூங்கவில்லை?" என்று கேட்டார் தாத்தா. "நீங்கள் இன்று எனக்குக் கதையே சொல்லவில்லையே, அப்படியானால் எனக்கு எப்படித் தூக்கம் வரும்"? என்றான் சபரி! "சரி இங்கே வா ஒரு குட்டிக் கதை சொல்லுகிறேன்" என்று தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டார்.

"ஒருநாள் ஒரு முயலுக்கும், ஆமைக்கும் பந்தயம் நடந்தது, யார் முதலில்....."

"நிறுத்துங்கள் தாத்தா, பழைய கதைகளையே சொல்லி அறுக்காதீர்கள்! புதுக் கதைகளைச் சொல்லுங்கள். நீங்கள் சொல்லும் கதைகள் சுஜாதாவின் கதைகளுக்குப் போட்டியாக அமைய வேண்டும்" என்று கத்தினான் சபரி.

"அடப்பாவி சுஜாதா எவ்வளவு பெரிய எழுத்தாளர் சரி, நான் வேறு கதை சொல்லுகிறேன்" என்று கதை சொல்ல தொடங்கினார் தாத்தா. "ஒரு ஊரில், ஒரு வீடு இருந்தது. அதில்...."

"என்ன தாத்தா எப்ப பார்த்தாலும் ஒரு ஊரில் என்றே ஆரம்பிக்கிறீர்கள்" என்று சலித்துக் கொண்டான் சபரி. "தம்பி, ஒழுங்காக கதையைக் கேளு. இடையில் கேள்வி கேட்கக் கூடாது புரிகிறதா!" என்றார் தாத்தா.

எங்கும் பசுமை! உணவுச் சங்கிலியில் எவ்விதக் குறைபாடின்றி, செழுமையாக இருந்தது. அவ்வூர், அவ்வூரில் வள்ளி என்பவள் வசித்து வந்தாள். அவளுக்குக் கணவன் இல்லை. இரு மகன்கள் மட்டுமே இருந்தனர். மூத்தவன் ராஜேஷ் இளையவன் கோபால், இவர்கள் சிறுவயதிலேயே தந்தை இறந்துவிட்டார்.





ஒருநாள் ராஜேஷ் பதட்டமாக ஓடிவந்தான். "அம்மா, கோபாலை யாரோ கடத்தி விட்டார்கள்" என்று அழுதான்? "என்னடா சொல்கிறாய், விளையாடாதே"! என்றாள் அம்மா, "நாங்கள் அங்கு விளையாடிக் கொண்டிருந்தோம், அப்போது ஒரு வண்டியில் கோபாலை தூக்கிச் சென்று விட்டனர்" என்றான் ராஜேஷ், இருவரும் போலீஸில் புகார் கொடுத்தனர்.

அங்குக் கோபாலை கடத்திச் சென்ற கொள்ளைக்காரர்களின் தலைவன் சரவணன், "இவனைப் பார்த்தால், பிற்காலத்தில் இவன் திறமைசாலியாக வருவான்போல் இருக்கிறது. இவனை, வெளியே விற்க வேண்டாம். பிற்காலத்தில் தேவைப்படுவான்" என்று உத்தரவிட்டான்.

வள்ளி தன் மகன் ராஜேஷை நன்கு படிக்க வைத்தாள். ராஜேஷ் நன்கு படித்து உளவுத்துறை அதிகாரியாகப் பொறுப்பேற்றான், உளவுத்துறையில் சிறப்பாக வேலை செய்து, குற்றவாளிகளைப் பிடித்துப் பாராட்டுக்களைப் பெற்றான்.

"தாத்தா நீங்கள் கோபாலை பற்றி ஒன்றும் சொல்லவில்லையே" என்று குறுக்கிட்டான் சபரி. "இரு சொல்கிறேன்" என்றார் தாத்தா.

கோபால் கொள்ளையர்களின் தலைவன் சரவணன் மூலமாக எல்லா முறைகளையும் கற்று, திறமைசாலியாக மாறினான். தன் கைவரிசையைக் காட்டி, நிறைய பொருட்களைத் திருடித் தலைவனிடம் காட்டிப் பரிசு பெற்றான்.

ஒருநாள், ராஜேஷின் உயர் அதிகாரி சரவணனின் குற்றங்களைச் சொல்லி, அவனைப் பிடிக்குமாறு உத்தரவிட்டார். ராஜேஷ், சரவணன் இருக்கும் இடத்தை அறிந்து, அவனைப் பிடிக்கச் சென்றான். ஆனால், கோபால், ராஜேஷை கயிற்றால் கட்டி சிறைபிடித்தான். "சபாஷ்! கோபால் சபாஷ்! என் சிஷ்யன் என்பதை நீ நிரூபித்துவிட்டாய்"

என்றான் தலைவன் சரவணன், "இவன் கைகளை அறுத்து, அதைப் பார்சல் செய்து உளவுத்துறைக்கு அனுப்புங்கள்" என்று கர்ஜித்த சரவணன், அடுத்த நொடி தலையில் ரத்தத்துடன் கீழே சரிந்தான். திடுக்கிட்டுப் பார்த்தான் தலைவன். அவனை அடித்தது கோபால்.

அண்ணன் தம்பி இருவரும் இணைந்து அங்குள்ள எல்லோரையும் சிறைப்பிடித்துச் சென்றனர்.

அண்ணன் ராஜேஷ் அனைவரின் பாராட்டைப் பெற்றான், பின்னர்....

"தாத்தா, எப்படி சாத்தியம்? எப்படி கோபாலும் ராஜேஷ்-ம் சேர்ந்தனர். ஒன்றும் புரியவில்லையே!" என்றான் சபரி.

அங்குதான் ஒரு திருப்பம், ராஜேஷ் ஒரு வருடத்திற்கு முன்னரே கோபாலை ஒரு திருட்டு வழக்கில், கைது செய்யும் போது அடையாளம் கண்டு, அவனிடம் பேசி அம்மாவிடம் கூட்டிச் சென்றான். கோபாலுக்கு எல்லாம் நினைவுக்கு வந்தது. சரவணன் என்னும் மிகப்பெரிய கொடூரனைப் பிடிக்கவும், மற்ற குற்றவாளிகளை மறைமுகமாக பிடிக்கவும் கோபால் ராஜேசுக்கு உதவி செய்தான்.

அன்று மாலை ராஜேசுக்குத் தொலைபேசி வந்தது. "அடுத்த தூண்டில் யாருக்கு?" என்றது ஒரு குரல், ராஜேஷ் சிரித்தபடியே "காத்திருக்கவும்"

சபரி, "தொலைபேசியில் ராஜேஷை அழைத்தது யார் தெரியுமா?" என்று கேட்டார் தாத்தா. "இது கூடவா தெரியாது, அது கோபால் தான்? என்றான் சபரி, சரி தாத்தா, நான் போய் தூங்குகிறேன் என்று சபரி தூங்க சென்றான்.

*- **சுஜாதா தாசன்** (புனைப்பெயர்)*
***நா. சா. சரவணன்***
*இளமறிவியல் இரண்டாமாண்டு, கணிதம்*





(சிறுகதை)

# இணைந்த கைகள்

"தென்றல் வந்து தீண்டும்போது என்ன வண்ணமோ மனசுல" என்று இசைஞானியின் பாட்டு கைப்பேசியில் அழைப்பு மணியாக ஒலித்துக் கொண்டிருக்க அதன் தொடு திரையில் குரு சார் என்று தென்பட்டது.

கைப்பேசியை அழுத்தி, "வணக்கம் சார். மன்னிச்சுடுங்க வண்டி பழுதாய்டுச்சு. அதனால் பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கிறேன். அங்க போய் சேர்ந்திட்டுப் பேட்டி எடுத்து முடிச்சதுக்கப்பறம் உங்களுக்குப் போன் பண்றேன் சார்" என்றாள் மகா.

"சரிம்மா மகா" என்று மறுமுனையில் அழைப்பு துண்டிக்கப்பட்டது.

மகா, தின ஒளி என்னும் பத்திரிகையில் பத்திரிகையாளராகப் பணிபுரிந்து வருகிறாள். இன்று ஜோதி அறக்கட்டளையின் நிறுவனங்களைப் பற்றி பேட்டி எடுக்க, மாங்குளத்தில் உள்ள ஜோதி அறக்கட்டளைக்குச் சென்று கொண்டிருக்கும் வழியில் அலுவலகம் சென்றுவிட்டுச் செல்லலாமே என்று வண்டியை திருப்பும்போது பழுதாகிவிட்டது. வருவதாகச் சொன்ன மகா இன்னும் வரவில்லையே என்று தினஒளி பத்திரிகையின் ஆசிரியர் குரு போன் செய்தார். மாங்குளத்திற்குப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தாள் மகா.

ஜோதி அறக்கட்டளை வந்தடைந்ததும், அந்த அறக்கட்டளையின் முகப்பில் இருந்த 'வாழ்க வளமுடன்' என்ற வாசகம் இவளைப் புன்முறுவல் கொண்டு வரவேற்றது. அந்த அறக்கட்டளையில் இருந்த சிறுவர்களும் முதியவர்களும் இவளுடைய சிறுவயதை பிரதிப்பலிப்பதுபோல இருந்தார்கள். அந்த அறக்கட்டளையின் துணை நிறுவனர் சாலினி மகாவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

"எதுவும் சாப்பிடுறீங்களா மிஸ் மகா," என்றார் சாலினி.

"இல்ல வேண்டாம் மேடம். நம்ம நேர்காணலை தொடங்கலாமே" என்று மகா கூறிக் கொண்டிருக்கையில் அறக்கட்டளையின் நிறுவனர் வெற்றி உள்ளே நுழைந்தார்.

"இவர் தான் என் கணவர் வெற்றி. ஜோதி அறக்கட்டளையின் நிறுவனர்" என சாலினி மகாவிற்கு அறிமுகம் செய்தார்.

பரஸ்பர அறிமுகத்திற்குப் பின் நேர்காணலைத் தொடர்ந்தாள் மகா.

"எந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு இந்த அறக்கட்டளை தொடங்கணும்னு எண்ணம் வந்துச்சு" என்று தன் முதல் கேள்வியைக் கேட்டாள் மகா.

"நான்கு வருடங்களுக்கு முன்னால நாங்க இரண்டு பேரும் ஒரு விபத்தில் சிக்கிக்கிட்டோம். வெற்றி கண் இழக்க வேண்டியிருந்தது. விளித்திரை மாற்று அறுவைச் சிகிச்சை பண்ணா கண்டிப்பாக பார்வை வந்திடும்னு டாக்டர் சொன்னாங்க. நாங்க கொடையாளருக்காகக் காத்திருந்ததில், எங்களுக்கு நாம ஏன் உடலுறுப்பு தானம், கண்தானம் பற்றி விழிப்புணர்வு கொடுக்கலாமேனு தோணுச்சு. நிறைய இடங்களுக்குப் பயணிக்கும்போது உணவு, இடம், உடுத்த துணி கூட இல்லாமல் இருப்பது பார்த்துட்டு இந்த அறக்கட்டளை தொடங்கனும்னு எண்ணம் வந்துச்சு" என்றாள் சாலினி.

"அப்புறம் எப்படி உங்க கணவருக்குப் பார்வை கிடைச்சது" என்றாள் மகா.

"அத சாலினி சொல்லுறதவிட நான் சொல்றேன், சாலினி காத்திருந்தது வீண்போகல ஒரு கொடையாளர் எனக்குக் கண் தானம் பண்ணாங்க. இரண்டு வருடம் முன்ன தான் பார்வை கிடைச்சது. சாலினியோட உறுதி தான் இந்த பார்வையும் இந்த அறக்கட்டளையும்" என்று வெற்றி கூறி முடிப்பதற்குள் "அவர் மிகையாக சொல்றாரு அவருக்குப் பார்வைபோன பொழுது எனக்கு இந்த உலகமே இருண்டது போல இருந்தது. மீதி இருக்க வாழ்க்கைய மத்தவங்களுக்குப் பயன்படுறமாதிரி வாழலாம்னு இந்த யோசனை சொன்ன பொழுது, எங்க குடும்பத்தில முதல்ல ஒத்துக்கல. இவங்க தான் நம்மலால முடியும் ஏன் உதவக்கூடாதுனு எல்லாத்தையும் சமாதானப்படுத்தி இந்த அறக்கட்டளைக்கு அடித்தளமிட்டார்" என்று பெருமை பொங்க தன் கணவரைப் பார்த்துக் கூறினாள் சாலினி.

"ஏன் ஜோதி அறக்கட்டளையினு பெயர் வைச்சீங்க" என்றாள், மகா.

"வள்ளலார் ஐயா வடலூரில் ஏத்திய ஜோதி இன்றும் அணையாமல் இருப்பது போல, இந்த அறக்கட்டளையும் நம்பி வந்தவங்களுக்குக் கலங்கரை விளக்கமாக இருக்கனும்னு இந்த பெயர் வைச்சோம்," என்றார் வெற்றி.





"உங்க குழந்தைங்க இந்த அறக்கட்டளைய தொடருவாங்களா?" என்றாள் மகா.

"இல்ல மேடம் எங்களுக்குக் குழந்தைகள் இல்ல" என்றாள் சாலினி.

"ஆனா இந்த அறக்கட்டளை மூலமாக படிக்கிற குழந்தைகள் எல்லாமே எங்க பசங்களாகத்தான் பார்க்கிறோம். அவங்க இந்த அறக்கட்டளையை தொடருவாங்க", என்றான் வெற்றி, ஒளி பொருந்திய முகத்துடன்.

நேர்காணலுக்குப் பிறகு, மகா தினஒளி பத்திரிகை நிலையத்திற்கு வந்து குரு சாரை பார்க்கச் சென்றாள்.

"என்னம்மா நேர்காணல் முடிச்சுட்டாயா?" என்றார் ஆசிரியர் குரு.

"நல்லபடியா முடிஞ்சுது சார். தம்பதி இரண்டு பேரும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காமல் செம்மையாக இந்த பணியை செஞ்சுட்டு வராங்க. குடும்பத்தில் ஒற்றுமை இருந்தால் சமூகத்திற்கு எப்படி சேவை பண்ணலாம்னு ஒரு எடுத்துக்காட்டாக இருக்காங்க சார்" என்றாள் மகா.

"இந்த கட்டுரை தொகுப்பிற்கு "இணைந்த கைகள்"–னு தலைப்பு கொடுக்கலாம்னு நினைக்கிறேன் சார்" என்றாள் மகா.

*– நா. ஞானேஸ்வரி*
*இளமறிவியல் இரண்டாமாண்டு,*
*இயற்பியல்*

# வியர்வைத் துளி

*வெறும் தருசினை உழுதி*
*பறக்குது பார் போர்வைப் புழுதி*
*சம தருசினை உழுதாச்சு*
*பறவை படைப் புழுவினைத் தின்ன வந்தாச்சு*
*தண்ணீர் மடையினைத் திறந்து விட்டு*
*மண் வாடையைக் காற்றில் பறக்கவிட்டு*
*பருவத்தில் பருத்தியை நட்டு*
*விவசாயம் செய் கஷ்டப்பட்டு*
*உன் வியர்வைத் துளியே*
*தாய் மண்ணின் நெற்றிப் பொட்டு*

**– A. அசோக்,**
*இளங்கலைத் தமிழ்,*
*இரண்டாமாண்டு.*

## அனைத்துக் கல்லூரித் தமிழ்மாணவர் ஆய்வுக் கருத்தரங்கம் - 03.03.2020




## கொரோனா - விழிப்புணர்வுப் பேரணி - 10.03.2020




## போலியோ விழிப்புணர்வு நிகழ்வு - 04.03.2020







## சிறப்பு இரத்ததான முகாம் - 10.03.2020



## சங்கமம் கலைவிழா - 16-18 டிசம்பர் 2019




## திருச்சியில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் சீ. சரவணஜோதியுடன் மாணவர்கள் - 14.02.2020

